**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.04/2022 மற்றும் 05/2022**

in

**அசல் வழக்கு எண்.133/2016**

1. ஜவகர் (எ) வேலுச்செட்டியார்
2. சண்முகசுந்தரம்
3. மல்லிகா
4. முத்துமாரியம்மாள் ... மனுதாரர்கள்/ 1, 3 முதல் 5 வாதிகள்

சுபாஸ்சந்திரபோஸ் (இறந்தவர்) ... 2 ம் வாதி

**/எதிர்/**

1. ராஜமாணிக்கம் ...1 ம் எதிர்மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி
2. மாரியப்பன்
3. பூமாரி
4. வினோத்
5. சந்தோஷ்
6. லட்சுமி
7. மாதவன்
8. பிரகாஷ் .. 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ உத்தேச 4 முதல் 10 பிரதிவாதிகள்
9. மாடத்தியம்மாள்
10. மகேஸ்வரி
11. சண்முகப்பிரியா .. 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/ உத்தேச 11 முதல் 13 பிரதிவாதிகள்

செல்லப்பா (இறந்தவர்) ... 1 ம் பிரதிவாதி
ஈஸ்வரமூர்த்தி (இறந்தவர்) ... 3 ம் பிரதிவாதி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 17:59:47 +0530

இம்மனுக்களானது 03.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 3, 6, 7 எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 23.10.2025 அன்று 3, 6, 7 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2, 4, 5, 8 எதிர்மனுதார்களுக்கு செய்தித்தாள் மூலமாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 27.01.2026 அன்று இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 9 முதல் 11 எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருF.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், 9 முதல் 11 எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 9(2) மற்றும் கட்டளை 22 விதி 4 பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கில் 29.06.2019 தேதியில் இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகள் நிலையில் வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்து, 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை 4 முதல் 10 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1)மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.04/2022 மற்றும் 05/2022–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3ம் பிரதிவாதி 29.06.2019 தேதியில் இறந்துவிட்டார் என்றும், அது விபரத்திற்கு இந்நீதிமன்றத்தில் மெமோவும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 17:59:53 +0530

தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது தண்ணீர் பாத்தியதைப் பொறுத்து பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு முதல் மனைவி மூலம் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களும், அதில் 2, 3 எதிர்மனுதாரர்கள் முதல் மனைவியின் மக்கள் ஆவார்கள் என்றும், முதல் மனைவியின் மூலம் பிறந்த இறந்துபோன மகள் கனகலட்சுமியின் மக்கள் தான் 4, 5 எதிர்மனுதாரர்கள் என்றும், மேற்படி கனகலட்சுமியின் கணவர் மாடசாமியும் இறந்துவிட்டார் என்றும், இரண்டாவது மனைவியின் மக்கள் தான் 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் என்றும், இறந்துபோன 3ம் பிரதிவாதியின் முதல் மனைவியான லட்சுமி என்பவளும், இரண்டாவது மனைவியான ராஜம்மாள் என்பவளும், 1ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்னமே இறந்துவிட்டார்கள் என்றும், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 30.09.2021 தேதியில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், அவரின் வாரிசுகள் தான் 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் என்றும், இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு தனியாக வாரிசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இறந்துபோன 3ம் பிரதிவாதி பாண்டிச்சேரி மாநிலத்தில் குடியிருந்து வருவதால், 3ம் பிரதிவாதியின் இறப்பு விபரம் மனுதாரர்களுக்கு உடனடியாக தெரியவில்லை என்றும், தற்போது 2ம் பிரதிவாதி ஊரில் 3ம் பிரதிவாதி இறப்பு விபரத்தை வெளிப்படையாக பிரஸ்தாபம் செய்த பின்னீடு, மேற்படி 3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் பெயர் விபரங்கள் மற்றும் முகவரிகளை சேகரித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாலும், கோவிட்–19 காலம் ஏற்பட்டுவிட்டதாலும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலாமல் 1130 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேலும், மேற்படி காலதாமதம் மனப்பூர்வமாக ஏற்பட்டதில்லை என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி காலதாமதத்தினால் அபேட்மெண்ட் ஏற்பட்டுவிட்டதை ரத்து செய்ய கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், ஆகையால், இவ்வழக்கில் 29.06.2019 தேதியில் இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகள் நிலையில் வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:00 +0530

ரத்து செய்து, 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை 4 முதல் 10 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. இ.ம.எண்.3/2022 ல் 11ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 9, 10 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இ.ம.எண்.04/2022 மற்றும் 05/2022–ன் எதிருரை மெமோக்களின் சுருக்கம் :

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் கோரும் கோவிட்–19 காலமானது 2020 மார்ச் 24 தேதிமுதலே தொடங்குகிறது என்றும், ஆனால் 3ம் பிரதிவாதி 29.06.2019 தேதியிலேயே காலமாகிவிட்டார் என்றும், இறந்துபோன 3ம் பிரதிவாதி இந்த மனுதாரர்களுக்கு நெருங்கிய உறவினர் என்றும், எனவே 3ம் பிரதிவாதி இறந்த காலகட்டத்திலேயே அவர் இறந்த விபரமும், அவருக்குரிய வாரிசுகள் பற்றிய விபரங்களும் இந்த மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் மனுதாரர்கள் கடந்த 2019ம் வருடத்தில் இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு வேண்டுமென்றே உரிய காலத்திற்குள் வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு, பின்னினைவாக சுமார் 3 1/2 வருட காலம் முடிவுற்ற பின்னர், மிகவும் காலபிற்பாடாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் காலதாமதத்திற்கான ஒவ்வொரு நாட்களுக்கும் உரிய விளக்கங்களை தராமல், மேம்போக்காக 3ம் பிரதிவாதி பாண்டிச்சேரியில் வசித்து வந்ததால் வாரிசு பற்றிய விபரங்கள் தெரியவில்லை என்றும், அதனால் உரிய காலத்தில் வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலவில்லை என உண்மைக்கு புறம்பான சங்கதிகளை தெரிவித்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்களுக்கு இம்மனுவில் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியதில்லை என்றும், மேலும், பிரதான வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சியில்லை என்பதை தெரிந்துகொண்டு, இவ்வழக்கினை நிகழ்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கோடு இம்மனுவினை மிகவும் காலபிற்பாடாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:07 +0530

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 9 முதல் 11 எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுக்களானது மனுதாரர்கள்/வாதிகளால், இவ்வழக்கில் 29.06.2019 தேதியில் இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகள் நிலையில் வழக்கில் கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்து, 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை 4 முதல் 10 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

6) இம்மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3ம் பிரதிவாதி 29.06.2019 தேதியில் இறந்துவிட்டார் என்றும், அது விபரத்திற்கு இந்நீதிமன்றத்தில் மெமோவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கை எதிர்மனுதாரர்கள் மீது தண்ணீர் பாத்தியதைப் பொறுத்து பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு முதல் மனைவி மூலம் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களும், அதில் 2, 3 எதிர்மனுதாரர்கள் முதல் மனைவியின் மக்கள் ஆவார்கள் என்றும், முதல் மனைவியின் மூலம் பிறந்த இறந்துபோன மகள் கனகலட்சுமியின் மக்கள் தான் 4, 5 எதிர்மனுதாரர்கள் என்றும், மேற்படி கனகலட்சுமியின் கணவர் மாடசாமியும் இறந்துவிட்டார் என்றும், இரண்டாவது மனைவியின் மக்கள் தான் 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் என்றும், இறந்துபோன 3ம் பிரதிவாதியின் முதல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:15 +0530

மனைவியான லட்சுமி என்பவளும், இரண்டாவது மனைவியான ராஜம்மாள் என்பவளும், 1ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்னமே இறந்துவிட்டார்கள் என்றும், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 30.09.2021 தேதியில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், அவரின் வாரிசுகள் தான் 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் என்றும், இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு தனியாக வாரிசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இறந்துபோன 3ம் பிரதிவாதி பாண்டிச்சேரி மாநிலத்தில் குடியிருந்து வருவதால், 3ம் பிரதிவாதியின் இறப்பு விபரம் மனுதாரர்களுக்கு உடனடியாக தெரியவில்லை என்றும், தற்போது 2ம் பிரதிவாதி ஊரில் 3ம் பிரதிவாதி இறப்பு விபரத்தை வெளிப்படையாக பிரஸ்தாபம் செய்த பின்னீடு, மேற்படி 3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் பெயர் விபரங்கள் மற்றும் முகவரிகளை சேகரித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாலும், கோவிட்–19 காலம் ஏற்பட்டுவிட்டதாலும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்க நடவடிக்கை எடுக்க இயலாமல் 1130 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.3/2022 மனுவானது இந்நீதிமன்றத்தால் 20.12.2014 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

8) மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் அல்ல என எவ்வித ஆட்சேபணையும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படாத காரணத்தினாலும், இறந்துபோன 3ம் பிரதிவாதிக்கு வாரிசுகளான 2 முதல் 8 எதிர்மனுதாரர்களை 4 முதல் 10 பிரதிவாதிகளாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:23 +0530

அசல் வழக்கில் கட்சி சேர்க்க அனுமதித்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**<u>9) இறுதியாக</u>**

**<u>இ.ம.எண்.04/2022</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 9 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 13.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 13.02.2026.

**<u>இ.ம.எண்.05/2022</u>**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 9 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 13.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 13.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.09 18:00:40 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.04/2022 and
I.A.No.05/2022
in
O.S.No.133/2016
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 09.02.2026**